கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No.411/2019**

திரு. பொன்னுசாமி (D.W –1) **3.2.2025**

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. முதல் விசாரணை வாக்குமூலத்தில் மற்ற எந்த பிரதிவாதிகளுக்கும் சேர்த்து தாக்கல் செய்கிறேன் என்றால் லட்சுமி ராமாத்தாள் ஆகியோருக்காக தாக்கல் செய்துள்ளேன். தாவாவில் வாதி என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்று தெரியுமா என்றால் பூமி மோசடியாக ஏற்பட்டுள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். தாவா சொத்து என்னுடைய தாத்தா சுப்பைய கவுண்டருக்கு எந்த வருட ஆவணத்தின் மூலம் பாத்தியம் என்று தெரியுமா என்றால் 1910 ஆம் ஆண்டு பத்திரத்தின் படி பாத்தியம். என்னுடைய தாயார் லட்சுமி எந்த வருடம் பிறந்தார் என்றால் பிறந்த தேதி தெரியாது. தற்சமயம் லட்சுமிக்கு 85 வயது. இதை வைத்து பார்க்கும் போது 1940ம் வருடம் அவர் பிறந்திருக்கலாம் என்றால் சரி. தாவா சொத்துக்களை பொறுத்து ஒன்னு ரெண்டு பிரதிவாதிகளுக்கும் மற்ற பிரதிவாதிகளுக்கும் இந்து வாரிசு உரிமை சட்டத்திற்கு முன்பு அவர்கள் பிறந்த காரணத்தால் ஏற்படாது என்றால் தவறு.

2. என்னுடைய அம்மாவிற்கு எந்த வருடம் திருமணம் நடந்தது என்றால் என் அம்மாவுக்கு திருமணம் நடந்து ஒரு வருடம் கழித்து நான் பிறந்தேன். என்னுடைய பிறந்த வருடம் என்னவென்றால் 1964 இல் நான் பிறந்தேன்.1ம் பிரதிவாதிக்கு லட்சுமிக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் ஒரே நேரத்தில் லட்சுமிக்கும் என்னுடைய தாயார்க்கும் திருமணம் நடந்தது. என்னுடைய பிறந்த வருடத்தின் படி கணக்கிட்டுப் பார்க்கும்போது அவர்கள் இருவருக்கும் 1963 ஆம் வருடம் திருமணம் நடந்ததாக எடுத்துக் கொள்ளலாம என்றால் எடுத்துக் கொள்ளலாம். 1989 ஆம் ஆண்டுக்கு முன்பே அவர்கள் இருவருக்கும் திருமணம் நடந்து விட்டதால் தாவா சொத்துக்களில் அவர்களுக்கு பாகம்

உரிமை இல்லை என்றால் தவறு. தாவா சொத்தை பொறுத்து வா.சா.ஆ–**4** போல 1,2 பிரதிவாதிகள் பெயரில் பட்டா, பாஸ்புத்தகம் ஏற்படுததப்பட்டதா என்றால் இல்லை.

3. தாவா சொத்துக்களை பொருத்து சுப்பையா கவுண்டர் உயிருடன் இருந்த போதும் அல்லது அவர் இறந்த பிறகு வா.சா.ஆ–**5** போல ஒன்று இரண்டு பிரதிவாதிகள் பெயரில் பட்டா எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல, ஏற்பட்டு உள்ளது. தாவா சொத்தை பொறுத்து 1,2 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்ட கந்தாய ரசீதுகள் ஏதேனும் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் இல்லை. தாவா சொத்தைப் பொறுத்து ஒன்னு ரெண்டு பிரதிவாதிகள் பெயர்கள் அடங்கல் ஆவணங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரி. தாவா சொத்தில் ஒன்று, இரண்டு பிரதிவாதிகள் என்றுமே சுவாதினத்தில் இல்லை என்பதால் தான் அவர்கள் பெயரில் வருவாய் ஆவணங்கள் ஏற்படவில்லை என்றால் தவறு. அவர்கள் பெயர் பட்டா உள்ளது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் தான செட்டில் மெண்ட் பத்திரமா என்றால் சரி. அந்த ஆவணத்தின் விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரி.

4. இந்த ஆவணத்தில் 1910 ஆம் ஆண்டு ஏற்பட்ட பாகப்பிரிவினையின்படி சொத்துக்கள் பாத்தியப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. அதற்கு அதில் சொத்துக்கள் தனியாக பாத்தியப்பட்டு ஆவணத்தை ஏற்படுத்தியவர் சுவாதினத்தில் இருந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் வா.சா.ஆ– **17** என்னுடைய சிறிய தாயார், சிறிய தகப்பனார் பெயருக்கு ஏற்படுத்திய ஆவணமா என்றால் சரி. அந்த ஆவணத்திலும் சொத்துக்கள் பாகப்பிரிவினை ஏற்பட்டு தனியாக சுவாதினத்தில் இருந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஒன்னு, ரெண்டு பிரதிவாதிகள் அசல் வழக்கில் 65/2009 தாக்கல் செய்த விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். அதன் அடிப்படையில் தான் சுப்பன்ன கவுண்டருக்கு வாரிசு சான்றிதழ் பெறுகிறார்கள் என்றால் சரி. அதன் பின்பு தான் தாவா சொத்தின் வருவாய் ஆவணங்கள் ஒன்னு, ரெண்டு

பிரதிவாதிகள் பெயரில் இடம் பெற்றுள்ளது என்றால் தவறு.தாவா சொத்துக்களை பொருத்து ஒன்னு ரெண்டு பிரதிவாதிகள் மற்றவர்களுடன் சேர்ந்து மோசடியாக வருவாய் ஆவணங்களில் பெயர் சேர்த்து விட்டதாக மங்களம் காவல் நிலையத்தில் வாசா.ஆ–1 முதல் தகவல் அறிக்கை ஏற்பட்டது என்றால் சரி.

5. அதன் அடிப்படையில் திருப்பூர் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.4 ல் குற்றப்பத்திரக்கை தாக்கல் செய்து வழக்கு நடந்து வருகிறது என்றால் சரி. மோசடியான ஆவணங்கள் ஏற்படுத்தியதை தொடர்ந்து வழக்கு நிலுவையில் உள்ளதால் வாதி தாவாவில் கோரியவாறு அந்த ஆவணங்கள் ரத்து செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. இதே நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை கேட்டு அசல் வழக்கில் 305/2011 நிலுவையில் உள்ளது தெரியுமா என்றால் தெரியும் இந்த வழக்கு சொத்தை பொருத்துத்தான் அந்த வழக்கு தான செட்டில் பத்திரங்கள் மோசடியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த சொத்தை பொறுத்து ஏற்பட்டுள்ளது. தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் நேரடியாக சொத்தில் உரிமையாளர்கள் என்ற அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. இந்த தாவாவில் பிரதிவாதிகள் அனைவருக்கும் ஒரே வழக்கறிஞர் நியமனம் செய்துள்ளோம் என்றால் சரி. அசல் வழக்கு எண் 305/2011 இல் நான் தரப்பினராக உள்ளேன் என்றால் சரி.

6. அந்த வழக்கில் யார் வழக்கறிஞராக நியமித்து உள்ளேன் என்றால் இதே வழக்கு வழக்கறிஞரைதான் நியமித்து உள்ளேன். இந்த தாவா தாக்கல் செய்த பிறகு எந்த ஒரு உரிமையும் இல்லாமல் அசல் வழக்கில் 305/2011 தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்து 1960 ஆம் ஆண்டிலிருந்து என்னுடைய தாத்தா ஏற்படுத்திய கிரைய ஆவணத்தின் படி பழனி கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் தவறு. அவர் இறப்பிற்கு பிறகு பழனிகவுணடர் 1ம் வாதிக்கு பாத்தியப் பட்டது என்றால் தவறு. 1ம் வாதி இருக்கும்போதே ஏற்படுத்திய உயிலின் அடிப்படையில் 2013 ஆம் வருடத்தில் இருந்து தாவா சொத்து ரெண்டாம் வாதிக்கு பாத்தியப்பட்டு அவருடைய சுவாதினத்தில் இருந்து

வருகிறது என்றால் தவறு. தாவா வாதி கோரியப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்து உயிலின் அடிப்படையில் இரண்டாம் வாதி சுவாதினத்தில் இருந்து வருவதால் ஒன்னு, ரெண்டு பிரதிவாதிகளுக்கு தான செட்டில் மெண்ட் படியோ, வழக்குப்படியோ எந்த ஒரு உரிமையும் ஏற்படாது என்றால் தவறு. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. நானும் என்னுடைய தாயாரும் முதன்மை சார்பு நீதிமன்றம் திருப்பூரில் அசல் வழக்கு எண் 131/2006 தாக்கல் செய்த விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கு 2.8.2023 ஆம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரி. அதனை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளோம். நீதிபேராணை எண். 38/2011 விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும் அசல் வழக்கில் 131/2006 தள்ளுபடி செய்யப்பட்டதால் நீதிப்பேராணையை வாபஸ் பெற்றுள்ளோம் என்றால் சரி.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.02.03 20:05:25 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.